வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-சரவண குமார்

தேதி 27.1.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

இந்தியாவிற்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், அனைத்து உடன்பாடுகளின் தாயாக திகழும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இன்று கோவாவில், மெய்நிகர் முறையில் பிரதமர் தொடக்கி வைத்த இந்தியா எரிசக்தி வார விழாவில் 120 நாடுகளில் இருந்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எரிசக்தி நிபுணர்கள் பங்கேற்றுள்ளனர்.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்பாக, மத்திய அரசு இன்று நாடாளுமன்ற வளாகத்தில் அனைத்து கட்சி கூட்டம் ஒன்றை நடத்தியது.

புதுச்சேரியில் மத்திய-மாநில திட்டங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த வீட்டு வசதி திட்டத்தை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் இன்று தொடக்கி வைத்தனர்.

*மோடி-ஒப்பந்தம்-1 (16)*

வாய்ப்புகளின் களமாகத் திகழும் இந்தியாவில் எரிசக்தியின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், எரிசக்தி துறையில் உலக அளவிலான பேச்சு வார்த்தைகளுக்கான மேடையாகவே, இந்தியா எரிசக்தி வாரம் உருவெடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று இந்தியா எரிசக்தி வாரவிழாவில் மெய்நிகர் முறையில்

உரையாற்றிய அவர் பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதியில் உலகின் முதல் 5 நாடுகளில் ஒன்றாகவும், எண்ணெய் சுத்திகரிப்பு திறனில் உலகின் முதல்நாடாக மேம்படும் நிலையிலும் இந்தியா இருப்பதாக கூறினார். இந்தியாவிற்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், அனைத்து உடன்பாடுகளின் தாயாக திகழும் என்றார். உலகின் மொத்த வர்த்தகத்தில் மூன்றில் ஒரு பங்களிக்கும் இரு பெரும் பொருளாதாரங்களுக்கு இடையிலான இந்த ஒத்துழைப்பு, இருதரப்பு வர்த்தக உடன்பாட்டை முழுமையாக பூர்த்தி செய்வதாக அமையும் என்றும் அவர் கூறினார். 140 கோடி இந்தியர்களுக்கும் கோடி கணக்கிலான ஐரோப்பிய யூனியன் மக்களுக்கும் பல புதிய வாய்ப்புகள் இந்த உடன்பாட்டினால் ஏற்படும் என்றும், பிரதமர் தெரிவித்தார்.

முன்னதாக பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் திரு அன்டோனியோ கோஸ்டா, ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி உர்சுலா வான்-டெர் லெயேன் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். இதை தொடர்ந்து வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் உட்பட மொத்தம் 7 உடன்பாடுகள் இறுதி செய்யப்பட்டன. பாதுகாப்பு, பசுமை ஹைட்ரஜன், பேரிடர் நிர்வாகம் உள்ளிட்ட துறைகள் தொடர்பான ஒப்பந்தங்களும் இதில் அடங்கும். பொருட்களின் வர்த்தகத்தில் இந்தியாவின் மிகப் பெரிய கூட்டாளியாக ஐரோப்பிய யூனியன் திகழ்வதும், கடந்த நிதியாண்டில் இந்தியாவிற்கும்-ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான பொருள் வர்த்தகம் 136 பில்லியன் டாலராக அதிகரித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மோடி-எரிசக்தி

இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி மெய்நிகர் முறையில் தொடக்கி வைத்து கோவாவில் நடைபெறும் எரிசக்தி வார விழாவில் 120 நாடுகளில் இருந்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எரிசக்தி துறை நிபுணர்கள்

பங்கேற்றுள்ளனர். பெட்ரோலியத் துறை அமைச்சர் திரு ஹர்திப் சிங் புரி தொடக்க விழாவில் பேசுகையில் அடுத்த 20 ஆண்டுகளில் உலக எரிசக்தி தேவையில் 35 சதவிகிதம் இந்தியாவின் தேவையாக இருக்கும் என்றார். பசுமை எரிபொருள மற்றும் உயிரி எரிபொருளுக்கு இந்தியா வேகமாக மாறி வருகின்ற போதிலும், நிலவரங்களின் ஸ்திரத் தன்மைக்கு, எண்ணெய்-எரிவாயுவும் மிக அவசியம் என்றார். நாட்டில், படிவுப் பாறை அதிகம் உள்ள சுமார் 1 லட்சம் சதுர கிமீ வடிநிலப் பகுதிகள் தற்போது கட்டுப்பாட்டில் இருந்து நீக்கப்பட்டு, எண்ணெய் கண்டு பிடிப்பு பணிகளுக்கு திறந்து விடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதுதொடர்பான இந்தியாவின் 500 மில்லியன் முதலீட்டு தொகுப்பினால் பயன் பெற, உலக கூட்டாளிகளுக்கு இந்தியா அழைப்பு விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். கோவா முதலமைச்சர் திரு பிரமோத் சாவத் உள்ளிட்டோர் விழாவில் கலந்து கொண்டனர்.

*பிரகதி*

உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில் தடைகளைக் களைந்து பணிகளை துரிதமாக நிறைவேற்றி முடிக்கும் வகையில், பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட பிரகதி டிஜிட்டல் வசதி, உயர்நிலை தலையீடு மூலம் திட்டங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றி முடிப்பதில், கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக முக்கிய பங்காற்றி வருகிறது. பிரகதி வசதி மூலம் திறம்பட்ட முறையில் கண்காணித்து நிறைவேற்றப்பட்ட முக்கிய திட்டங்களில் ஒன்றான ஹரிதாஸ்பூர்-பாராதீப் புதிய ரயில் பாதை திட்டம் குறித்து ஒரு தொகுப்பு.....

(வாய்ஸ்)

கனிம வளம் அதிகம் உள்ள கிழக்கு இந்தியாவின் உள்நாட்டுப் பகுதிகளுக்கு மேம்பட்ட துறைமுக வசதிக்கான நேரடி ரயில் இணைப்பு கிடைக்கும் வகையில் ஒடிசா மாநிலம் ஹரிதாஸ்பூர்-பாராதீப் இடையே, 82

கிலோமீட்டர் நீளத்திற்கு புதிய ரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கு ரயில்வே அமைச்சகம் கடந்த 1997-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒப்புதல் அளித்தது. பொருளாதார பலன்கள் அதிகம் உள்ள இம்முக்கிய திட்டம், நிதிப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் 20-ஆண்டுகளுக்கும் மேலாக தடைபட்டிருந்த நிலையில், பிரதமர் திரு நரேந்திர மோடி, 2018-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் திட்டத்தின் அமலாக்க நிலவரங்களை பிரகதி வசதி மூலம் மறுஆய்வு செய்து, நில ஆர்ஜிதப் பிரச்சனைகள், சுற்றுச்சூழல் அனுமதி பிரச்சனைகள் மற்றும் நிதிப் பற்றாக்குறைக்கு காலக்கெடு அடிப்படையில் தீர்வு கண்டு, திட்டப் பணிகளை துரிதப்படுத்துமாறு, ஒடிசா அரசு, ரயில்வே அமைச்சகம், மற்றும் சம்பந்தப்பட்ட மாநில நிர்வாகங்களுக்கு அறிவுறுத்தினார். இதைத் தொடர்ந்து அதிகாரிகளின் நேரடி தலையீடு மற்றும் இழப்பீடு அடிப்படையில் நில ஆர்ஜிதப் பணிகளும் சட்டப்பூர்வ ஒப்புதல் பெறும் பணிகளும் துரிதமாக்கப்பட்டு, திட்டப் பணிகளுக்கு உத்வேகம் அளிக்கப்பட்டது. தொடர்ந்து பணிகள் முழுமையாக நிறைவேற்றி முடிக்கப்பட்டு ஹரிதாஸ்பூர்-பாராதீப் ரயில்பாதை 2020-ஆம் ஆண்டில் சரக்கு போக்குவரத்துக்கும், 2024-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பயணிகள் போக்குவரத்துக்கும் திறந்து விடப்பட்டது. இத்திட்டத்தினால் பிராந்திய அளவிலான பயிற்சி ஊக்கம் பெற்றுள்ளதும், உயர்நிலை மறுஆய்வு மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகளால் திட்டங்களை திறம்பட்ட முறையில் நிறைவேற்றி முடித்தல் என்பதற்கு எடுத்துக் காட்டாக, இத்திட்டம் திகழ்வதும் குறிப்பிடத் தக்கது.

*அனைத்துக் கட்சி*

நாளை தொடங்க உள்ள நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்பாக, மத்திய அரசு இன்று நாடாளுமன்ற வளாகத்தில் அனைத்து கட்சி கூட்டம் ஒன்றை நடத்தியது. பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தலைமையிலான இக்கூட்டத்தில் மாநிலங்களவையின்

அவை முன்னவர் திரு ஜே பி நட்டா, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, இணை அமைச்சர்கள் திரு அர்ஜூன்ராம் மேக்வால், டாக்டர் எல் முருகன், மூத்த காங்கிரஸ் தலைவர் திரு ஜெய்ராம் ரமேஷ், திமுகவைச் சேர்ந்த திரு திருச்சி சிவா, திரிணமுல் காங்கிரஸ் கட்சியின் திருமதி சகாரிகா கோஷ், சமாஜ்வாதி எம்பி திரு ராம்கோபால் யாதவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் பகுதியில், குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் இடம் பெறும் என்றும், பின்னர் இருஅவைகளிலும் பட்ஜெட் மீது விவாதங்கள் நடைபெறும் என்றும் திரு கிரண் ரிஜிஜூ பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். கூட்டத் தொடரை சுமுகமான முறையில் நடத்த அனைத்து கட்சிகளின் ஒத்துழைப்பை அரசு நாடுவதாக அவர் கேட்டுக் கொண்டார்.

புதுச்சேரி-வீட்டு வசதி

பிரதமரின் 2-ஆம் கட்ட நகர்புற வீட்டு வசதி திட்டத்தையும் புதுச்சேரி அரசின் பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு வீட்டு வசதி திட்டத்தையும் ஒருங்கிணைத்து பயனாளிகள் வீடு கட்டிக் கொள்ள, 5 லட்சம் ரூபாய் மானியம் வழங்கும் திட்டத்தை இன்று புதுச்சேரியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் தொடக்கி வைத்து, 1 லட்சம் ரூபாய் முதல் தவணை நிதி உதவிகளை வழங்கினர். நகர்புற ஏழைகளுக்கான பிரதமரின் வீட்டு வசதி திட்டம், மாபெரும் மக்கள் நலப் புரட்சியாகவே திகழ்வதாக விழாவில் பேசுகையில் கூறினார். மத்திய-மாநில அரசு திட்டங்கள் ஒருங்கிணைக்கப் படுவதால் புதுச்சேரியை குடிசை இல்லா மாநிலமாக மேம்படுத்தவும், மாநிலத்தை வளர்ச்சியின் அடுத்த கட்டத்திற்கு இட்டுச் செல்லவும் ஏதுவாகும் என்று அவர் தெரிவித்தார். துணை நிலை ஆளுநர் உரையில் இருந்து ஒரு பகுதி.....

(வாய்ஸ்- கைலாஷ்நாதன்)

கட்டுமானப் பொருட்களின் விலை உயர்விற்கு ஏற்ப வீட்டு வசதிக்கான நிதி உதவிகளை உயர்த்தி வழங்க வேண்டும் என்பதே அரசின் எண்ணம் என்று, முதலமைச்சர் திரு ரங்கசாமி, விழாவில் பேசுகையில் கூறினார். மத்திய-மாநில அரசுத் திட்டங்களை முந்தைய அரசே ஒருங்கிணைத்து கூடுதல் உதவி வழங்கியிருக்கலாம் என்றாலும், அவர்கள் அதை செய்யவில்லை என்று திரு ரங்கசாமி குறிப்பிட்டார். முதலமைச்சர் உரையில் இருந்து ஒரு பகுதி............

(வாய்ஸ்-ரங்கசாமி)

கம்பன் கலையரங்கில் நடைபெற்ற ஒருங்கிணைந்த வீட்டு வசதி திட்டத்தின் தொடக்க விழாவில் சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு திருமுருகன், அரசுக் கொறடா திரு ஏ கே டி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர் திரு அனிபால் கென்னடி, மற்றும், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். புதுச்சேரி அரசின் குடிசை மாற்று வாரியம் மூலமாக அமலாக உள்ள இத்திட்டத்தின் கீழ் புதுச்சேரியின் அனைத்து 4 பிராந்தியங்களிலும், பொது பிரிவு மற்றும் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு மொத்தம் ஆயிரத்து 327 வீடுகள் கட்டப்பட உள்ளன.

*வானிலை*

கிழக்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக இன்று கோவை, நீலகிரி கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மற்றபடி தமிழ்நாடு, மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் பிப்ரவரி 2-ஆம் தேதி வரை வறண்ட வானிலையே நிலவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றும் நாளையும், தென் தமிழகத்தின் கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என

அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நெல்லை மாவட்டம் ஊத்து பகுதியில், 5 செமீ மழை பதிவாகி உள்ளது. வெப்பநிலையைப் பொறுத்த வரை கொடைக்கானலில் 6.2 டிகிரி செல்சியஸ் குறைந்த பட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்*

வதோதராவில் இன்று மாலை நடைபெறும், WPL போட்டியில் குஜராத்-டெல்லி மகளிர் அணிகள் மோத உள்ளன. 19-வயதுக்கு உட்பட்டவர்களுக்கான ஐசிசி உலக கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், புலவாயோ நகரில் இன்று நடைபெறும் சூப்பர்-6 போட்டி ஒன்றில், இந்திய அணியால் நிர்ணயிக்கப்பட்ட,------- ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி 2-ஆவதாக ஆடும் ஜிம்பாப்வே அணி, ------- சற்று முன் வரை, ------ ஓவர்களில்,------ விக்கெட் இழப்பிற்கு, ----------- ரன் எடுத்து இருந்தது.

*சென்னை விமானநிலையம்*

சென்னை சர்வதேச விமான நிலையத்தின் 2-ஆவது புறப்பாட்டு முனையத்தில் சிறு தீ விபத்து ஏற்பட்ட போதிலும் தீயணைப்பு துறையினர் மூலம் தீ உடனடியாக அணைக்கப்பட்டதால், விமான சேவை எதுவும் பாதிக்கப்படவில்லை. புறப்பாட்டுப் பகுதியில் புகை மூட்டம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பயணிகள் அங்கிருந்து வெளியேற அறிவுறுத்தப்பட்டனர்.

*ராஜ்நாத்*

இந்தியாவின் போர் ஆயத்த நிலை, உள்நாட்டு தொழில் நுட்பங்களால் வலுப்பெற்று வருவதையே, ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கை உலகிற்கு வெளிப்படுத்தி இருப்பதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கழக விஞ்ஞானிகளுக்கான, பாராட்டு விழாவில் அவர்

பேசுகையில், டிஆர்டிஓ விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட தொழில் நுட்பங்கள் தான், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது பெருமளவில் பயன்படுத்தப்பட்டதாக கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் அரசின் சுயசார்பு முயற்சிகளின் காரணமாக, இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி, ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவில் இருந்து, தற்போது 24 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்து இருப்பதாகவும், 2030-ஆம் ஆண்டிற்குள் இதை 50 ஆயிரம் கோடி ரூபாயாக அரசு செயல்படுத்தி வருவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இந்தியாவிற்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையிலான வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், அனைத்து உடன்பாடுகளின் தாயாக திகழும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

இன்று கோவாவில், மெய்நிகர் முறையில் பிரதமர் தொடக்கி வைத்த இந்தியா எரிசக்தி வார விழாவில் 120 நாடுகளில் இருந்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எரிசக்தி நிபுணர்கள் பங்கேற்றுள்ளனர்.

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்பாக, மத்திய அரசு இன்று நாடாளுமன்ற வளாகத்தில் அனைத்து கட்சி கூட்டம் ஒன்றை நடத்தியது.

புதுச்சேரியில் மத்திய-மாநில திட்டங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த வீட்டு வசதி திட்டத்தை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் இன்று தொடக்கி வைத்தனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.